IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT
PADMANABHAPURAM

Date : 05.08.2024

C.M.P.No.2969/2024

L.W.1 ராகுல்ராம் வயது 25, த-பெ.திரவியம், ஆத்திபரப்பு, திக்கணங்கோடு, கன்னியாகுமரி என்ற முகவரியில் வசித்து வருபவரின் பிரமாண வாக்குமூலம்.

*****

நான் இவ்வழக்கில் புகார்தாரர் ஆவேன். துரைராஜ், அமிர்தராஜ், தங்கையன், ஜெகன்ஜோதிபாஸ், ராஜேந்திரன், ஜெனில், சிவகுமார் ஆகியோர்கள் மீது தனிநபர் புகார் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். கடந்த 03.01.2024 ம் தேதி அதிகாலை சுமார் 03.00 மணியளவில் மேற்படி 7 நபர்களும் என் வீட்டிற்கு வந்து கதவை அடித்து தட்டினார்கள். என்னை புன்டாமவனே என்று திட்டினார்கள். நான் சத்தம்கேட்டு நானும் எனது அப்பாவும், அம்மாவும் வெளியே வந்தோம், அப்போது துராஜ் என்பவர் நீ தானே சுபா என்பவருடைய வீட்டில் கதவை தட்டினாய் என்று கேட்டு கெட்டவார்த்தைகளில் திட்டினார். நான் தற்போது தான் தூக்கத்தில் இருந்து எழும்பி வருகிறேன். கெட்டவார்த்தைகளில் பேசாதே என்று நான் சொன்னேன். துரைராஜ் என்பவர் என்னைமிதிக்க வந்தார். நான் ஒதுங்கிவிட்டேன். அவர் கீழே விழுந்துவிட்டார். அதில் அவருக்கு கையில் அடிபட்டது. அமிர்தராஜ், தங்கையன் சேர்ந்து என்னை மொத்தமாக பிடித்துவிட்டார்கள். இரண்டு கைகளையும் பின்னால் சேர்த்து பிடித்தார்கள். ஜெகன்ஜோதிபாஸ் என்பவரும் என் கையை பிடித்துவிட்டார். பின்னர் என்னை புன்டாமவனே அடித்து கொல்லுங்கடா என்று சொன்னார். ராஜேந்திரன் என்பவர் என்னை மிதிக்க வந்தார். ஜெனில் என்பவர் கையில் வைத்திருந்த கட்டையால் என்னை அடித்துவிட்டார். சிவகுமார் என்பவர் ஊருக்கு வரி கட்டவில்லை என்றால் இந்தமாதிரி தான் பிரச்சினை செய்வோம் என்று சொன்னார்கள். சத்தம் கேட்டு என் பெற்றோர்கள் வந்த போது மேற்படி நபர்கள் ஊருக்கு வரி கட்டவில்லை என்றால் உன் அப்பா, அம்மாவை கூட்டிகொண்டு ஊரை விட்டு சென்றுவிடு இல்லை என்றால் உன் மீது பொய் வழக்கு போடுவோம் என்றும் எனக்கு கொலைமிரட்டல் விடுத்துவிட்டு சென்றார்கள். அதன்பின்பு

நான் என்னுடைய உறவினர் வீட்டிற்கு பயந்துசென்றுவிட்டேன். குழித்துறை மருத்துவமனையில் சிகிட்சை எடுத்துக்கொண்டேன். மருத்துவனையில் இருந்த போது போலீசார் விசாரித்து என்னிடம் புகார் பெற்றுச்சென்றார்கள்., ஆனால் நான் கொடுத்த புகாரிற்கு நடவடிக்கை எடுக்காமல் எதிர் தரப்பினர் கொடுத்த புகாரின் பேரில் என் மீது வழக்கு பதிவு செய்தார்கள். நான் பிணையில் வெளிவந்தவுடன் எதிர்தரப்பினர் மீது நடவடிக்கை எடுப்பதற்கு தக்கலை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். நான் கொடுத்த புகாரிற்கு நடவடிக்கை எடுக்காததால் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் அவர்களுக்கு புகார் அனுப்பினேன். அவர்களும் நடவடிக்கை எடுக்கவில்லை. அதனால் எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்ககோரி இந்த புகார் மனுவை தாக்கல் செய்துள்ளேன்.

சாட்சியின் கையெழுத்து

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்துசெய்தும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

குற்றவியல் நடுவர் எண்.1,
பத்மநாபபுரம்